MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# ஆற்றுப்படையில் நிறப்பண்பு உணர்த்தும் உரிச்சொற்கள்

திருமதி.மு.பூங்கோதை,
உதவிப்போராசிரியர்,தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
poonkothai-tam@sfrcollege.edu.in - 7010350017.
DOI 10.5281/zenodo.13117888.

**Abstract :**

**Attributes describe the properties of an object. Tolkappiyar identifies words that express multiple characteristics as color, shape, pride, softness, wealth as characteristic adjectives. This theory is based on matching the characteristic adjectives found in archeology.**

**Key Words : Aattruppadai - Tho;kappiyam - Character**

## முன்னுரை

ஒரு பொருளின் தன்மைகளை விளக்குவது பண்பு ஆகும். நிறம் , வடிவம், பெருமை, மென்மை, வளமை என்று பல தன்மையை வெளிப்படுத்தும் சொற்களை பண்பு உரிச்சொற்கள் என்று தொல்காப்பியர் அடையாளப்படுத்துகின்றார். தொல்காப்பிய உரியியலில் இடம்பெறுகின்ற பண்பு உரிச்சொற்களை ஆற்றுப்படையில் பொருத்தி ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

## அகராதிகள் தரும் விளக்கம்

பண்பு குறித்து அகராதிகள் தருகின்ற விளக்கம் முக்கியத்துவம் பெறுகின்றன.

### கழகத் தமிழ் அகராதி

பண்பு என்பதற்கு , "குணம், தகுதி, விதம், இயல்பு, மனத்தன்மை, அழகு, செய்கை, பண்புப்பெயர்"[1] என்று விள்க்கம் அளிக்கின்றது.

### செந்தமிழ் அகராதி

பண்பு என்பதற்கு செந்தமிழ் அகராதி "குணம் , இயல்பு, தன்மை, அழகு, முறை, செய்கை"[2] என்பன போன்ற பொருள்களைத் தரவல்லன விளக்கம் அளிக்கின்றது.

### மெய்யப்பன் தமிழ் அகராதி

பண்பு என்ற சொல்லிற்கு மெய் ;யப்பன் தமிழ் அகராதியானது , "வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் நாற்குணம், இயல்பு, மனத்தன்மை, பிறர் இயல்பை


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

அறிந்து நடக்கும் நற்குணம் , விதம், பண்புப்பெயர், அழகு, செய்கை"[3] என்று பல பொருள்களைக் கூறுகின்றது.

**க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி**

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி , "ஒன்றுக்கு இயல்பாக அல்லது அதற்கே உரித்தானதாக இருக்கும் தன்மை , இயல்பு, கண்ணியம் தரும் இயல்பு , நற்குணம்"[4]என்று பண்பிற்கு பலவிதமான பொருள்களைத் தருகின்றது.

**மதுரைத் தமிழ் பேரகராதி**

மதுரைத் தமிழ் பேரகராதியானது பண்பு என்பதற்கு , "குணம், தகுதி, விதம், சுபாவம்" என்றும் , பண்புச்சொல்லிற்கு "பொறிகளால் அறியப்படுங் குணவுரிச்சொல்"[5] என்று விளக்கம் தருகின்றது.

**தமிழ் மொழி அகராதி**

தமிழ் மொழி அகராதி பண்பு என்ற சொல்லிற்கு , "குணம், தகுதி, விதம்" என்றும், பண்புரிச்சொல்லிற்கு, "பொறிகளாலறியப்படுங் குணம்" [6] என்ற விளக்கத்தினை அளிக்கின்றது.

**தம்பியின் தமிழ் அகராதி**

பண்பு என்பதற்கு தம்பியின் தமிழ் அகராதியானது , "குணம், தகுதி, முறை, அழகு, வகை, செய்கை, வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் நாற்குணம்" [7] என்று விளக்கம் தருகின்றது.

**இலக்கணிகள் சுட்டும் பண்பு**

தொல்காப்பியர் பெயர்ச்சொற்களை , உயர்திணைப் பெயர்கள் , அஃறிணைப் பெயர்கள் என்று வகைப்படுத்துகின்றார். அவற்றுள் உயர்திணைப் பெயர்களை விரித்துக்கூறும் இடத்து,

**"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே**
**வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே**
**பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே**
**பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே**
**கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே**
**இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரோடு**
**அன்றி யனைத்தும் அவற்றியல் பினவே"[8]**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்று குறிப்பிடுகையில் "பண்புகொள் பெயரே" என்று சுட்டுகின்றார். இதற்கு சேனாவரையர், "பண்பு கொள் பெயர் - கரியான் செய்யான் என்பன"[9] என்று சான்று காட்டி விளக்குகின்றார். இதனிலிருந்து பெயர்ச்சொற்களுள் பண்புப்பெயர் பெறுகின்ற இடத்தினை தெரிந்து கொள்ள முடிகின்றது. நன்னூலாரும் , உயிர் உடையது, உயிர் அல்லாதது என்னும் இருவகையுள் அடங்குகின்ற உலகத்துப் பொருள்களினுடைய குணங்களே பண்புகளாகும் என்று கூறுவதை,

**"உயிர் உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே"[10]**

என்ற நூற்பாவின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. உயிர்ப்பொருட்களின் குணப்பண்புகளை,

**"அறிவு அருள் ஆசை அச்சம் மானம்**
**நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்**
**நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி**
**துணிவு அழுக்காறு அன்பு இளமை மூப்பு இகல்**
**துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்**
**வென்றி பொச்சாப்பு ஊக்கம் அறம் மதம்**
**மறவி இனைய உடல்கொள் உயிர்க்குணம்"[11]**

என்ற நூற்பாவின் வழி 32 குணங்களை உயிர்ப்பொருள்களின் பண்புகளாக நன்னூலார் சுட்டுவதை அறிந்துகொள்ள முடிகின்றது. உயிர்ப்பொருட்களின் தொழிற்பண்புகளை,

**"துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்**
**உய்த்தல் ஆதி உடல்உயிர்த் தொழிற்குணம்"[12]**

என்ற நூற்பாவின் வாயிலாக துய்த்தல் , உறங்குதல், வணங்குதல், அணிதல், செலுத்துதல் போன்ற ஐந்தும் உயிர்ப்பொருட்களின் தொழிற் பண்புகள் என்பதை தெரிந்துகொள்ள முடிகின்றது. மேலும் உயிரற்ற பொருட்களின் குணம் மற்றும் பண்புகளை,

**"பல்வகை வடிவு இருநாற்றம் ஐவண்ணம்**
**அறுசுவை ஊறுஎட்டு உயிர்அல் பொருட்குணம்"[13]**

என்ற நன்னூலாரின் நூற்பாவி ;ன் வழி உயிர் உடையன அல்லாதன பொருட்களின் பண்புகளை அறிய முடிகின்றது. மேலும் நன்னூலார் உயிரற்ற பொருட்களின் தொழிற் பண்புகளை,

**"தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்**
**ஈதல் இன்னன இருபொருள் தொழில்குணம்"[14]**

என்ற நூற்பா வழி சுட்டுகின்றார். உரிச்சொற்களைப் பண்பு பகர் பெயர்களாகக் கொண்டதால் உயிர் மற்றும் உயிரில் பொருள்களின் பண்புகளை நன்னூல் விரிவாகக் கூறியுள்ளது. தொல்காப்பியம் பெயர்ச்சொற்களுள் பண்புப் பெயர்களை ஒருவகையாக எடுத்துக் காட்டுவது போல உரிச்சொற்களுள் பண்பு உரிச்சொற்களைக் குறிப்பிடுகின்றது. ஆனால் பண்பு என்பதற்குரிய தெளிவான விளக்கம் தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை.

**தொல்காப்பியர் சுட்டும் பண்பு உரிச்சொற்கள்**

தொல்காப்பியர் உரியியலில் 18 உரிச்சொற்களைக் குறிப்பிடுகின்றார். அவைமுறையே,

1. குரு
2. கெழு
3. தட
4. கய
5. நளி
6. சாயல்
7. வெம்மை
8. செழுமை
9. வாள்
10. நுணங்கு
11. சிவப்பு
12. கறுப்பு
13. நுழைவு
14. வார்தல்
15. போகல்
16. ஒழுகல்
17. பசப்பு
18. நொசிவு

என்பவையாகும்.

**நிறப்பண்பை உணர்த்தும் உரிச்சொற்கள்**


http://Creativecommons.org//license/by/4.0/.

தொல்காப்பியர் நிறத்தை உணர்த்தும் உரிச்சொற்களாக , குரு, கெழு, பசப்பு, கறுப்பு, சிவப்பு, போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். இதனை,

**"குருவுங் கெழுவும் நிறனாகும்மே"**[16]

**"பசப்புநிற னாகும்"**[17]

என்ற இரு நூற்பாக்களில் குரு , கெழு, பசப்பு ஆகியவை நேரடியாக நிறப்பண்பை உணர்த்தும் என்பதை தெரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் கறுப்பு மற்றும் சிவப்பு குறித்து சொல்லுகையில் அவை வெகுளி என்ற குறிப்புப் பொருளை உணர்த்தும் என்று கூறி பின் அடுத்த நூற்பாவில் நிறத்தை சுட்டவும் இச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று தொல்காப்பியர் சுட்டுகின்றார். அதனை,

**"கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள"**[18]

என்ற நூற்பாவில் வெகுளி உணர்த்தும் என்று கூறி பின் அடுத்த நூற்பாவில்,

**"நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப"**[19]

என்று நிறம் உணர்த்தும் பண்பைச் சுட்டுகின்றார். தொல்காப்பியர் சுட்டிய இவ்வைந்து உரிச்சொற்களுள் குரு , கெழு, சிவப்பு ஆகிய மூன்று சொற்களின் பயன்பாடு ஆற்றுப்படை நூல்களில் மிகுந்து உள்ளது. பசப்பு , கறுப்பு ஆகிய சொற்கள் ஆற்றுப்படையில் இடம்பெறவில்லை.

**குரு**

குரு என்ற உரிச்சொல் நான்கு இடங்களில் ஆற்றுப்படை இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | குரூஉ மயிர் யாக்கைக் (திரு.,312) | நிறம் |
| 2. | குரூஉக் கண் இறடிப் (மலை.,169) | |
| 3. | குரூஉக்கண் பிணையல் (மலை.,349) | |
| 4. | குரூஉப்புலி பொருத (மலை.,517) | |

குரு என்பது குரூஉ என்று அளபெடுத்து ஆற்றுப்படையில் வந்துள்ளது. தொல்காப்பியர் நிறப்பண்பை எவ்வித மாற்றமும் இல்லாமல் அதே பொருண்மையை விளக்குகின்றது. குரு என்பதற்கு கழகத் தமிழ் அகராதி, "ஆசான்,


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

இருமாத்திரை, இரும்பு, செம்பு, ஈயம் முதலிய உலோகங்களைப் பொன் , வெள்ளியாகப் போதிக்கும் சிந்தூரம் , உவாத்தி, ஓர் அரசன், காத்திரம், சுத்தசலம், சோறு, துருசி, நிறம், துரோணன், நாடு ஐம்பத்தாறுள் ஒன்று, நிறம், பாரம், தந்தை, பிரகாசம், பிரகஸ்பதி, பெருமை, மேன்மை, வருத்தம், வியாழம், சினங்கொள்ளுதல், கொட்டை, முத்துக் குற்றங்களுள் ஒன்று, துரிசு, பலண்டுறுகம், ஞானாசிரியன், உபாத்தியாயன், புரோகிதன், பூசநாள், கனம், பருமன், நெடீல், குருகுலத் தலைவன் , குருவருடம், குருநாடு, குருபூமி, தேர், சிவன், திவ்வியம், நேரசை, அடிகள், அத்தன், ஆரியன், இறைவன், ஈசன், ஐ, கடவுள், குரவன், கோமான், சாமி, தேசிகன், பகவன், பதி, புங்கவன், பெருமான்”[20] போன்ற பல பொருள்களை முன்வைக்கின்றது. நிறம் என்ற ஒரு பொருளைப் போன்ற பல பொருள்களை குரு என்ற சொல்லிற்கு உண்டு என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், “ஆசிரியர், ஆசான், முன்னுதாரணமாக இருப்பவர், ஆயரால் அபிஷேகம் செய்யப்பட்டவர் , மக்கட்பேறு, சொத்து, ஞானம், தலைமைப்பண்பு, மஞ்சள்நிறம், புஷ்பகாரம், வடகிழக்கு திசை முதலியவற்றைக் குறிக்கும் கிரகம்” [21] என்று க்ரியா அகராதி தரும் விளக்கத்தின் வழி குரு என்ற உரிச்சொல்லிற்கு வழங்கப்படுகின்ற பிற பொருள்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

நிறம் என்பதை உணர்த்துகின்ற பண்பு உரிச்சொல்லாக இல்லாமல் , ஆசிரியர், கிரகம் போன்றவற்றை குறிக்கின்ற பெயர்ச்சொல் வடிவமாக குரு இருப்பதை அகராதிகள் தருகின்ற விளக்கத்தின் வழி தெரிந்து கொள்ள முடிகின்றது.

**கெழு**

கெழு என்ற உரிச்சொல் 11 இடங்களிலும் , அளபெடுத்து கெழீஇ என்று 5 இடங்களிலும், கேழ் என்று 4 இடங்களிலும் ஆற்றுப்படை இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1 | உருகெழு செலவின் (திரு.,51) | பொருந்துதல் |
| 2 | சீர்கெழு விழவினும் (திரு.,220) | |
| 3 | உருகெழு வியன்நகர் (திரு.244) | |


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

| | | |
|---|---|---|
| 4 | வேல்கெழு தடக்கைக் (திரு.,265) | |
| 5 | பரிசிலர் தாங்கும் உருகெழு (திரு.,273) | |
| 6 | பீடுகெழு திருவின் (பொரு.,53) | |
| 7 | உருகெழு குருசில் (பொரு.,131) | |
| 8 | வளம்கெழு பாக்கத்து (பெரும்.,367) | |
| 9 | பயங்கெழு மீமிசைக் (மலை.,278) | |
| 10 | சீர்கெழு சிறப்பின் (மலை.,570) | |
| 11 | உரன்கெழு நோன் (சிறு.,190) | |
| | கெழீஇ | |
| 12 | பல்குடி கெழீஇய (பெரும்.,399) | பொருந்துதல் |
| 13 | கூடு கெழீஇய (பொரு.182) | |
| 14 | பால்வார்பு கெழீஇப் (மலை.,114) | முற்றுதல் |
| 15 | கேளாது கெழீஇச் (மலை.,166) | உறவு கொள்வதால் |
| 16 | பழங்குடி கெழீஇ (மலை.,479) | நிறைந்து நிற்றல் |
| | **Nfo;** | |
| 17 | பூங்கேழ்த் தேய்வை (மலை.,33) | நிறம் |
| 18 | கேழ்கிளர் மார்பிற் (மலை.,193) | |


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

| | | |
|---|---|---|
| 19 | வான்கேழ் நிதியமொடு (சிறு.,249) | |
| 20 | பாற்கேழ் (பெரும்.,319) | |

கெழு நிறப்பண்பை உணர்த்துவதோடு மட்டுமல்லாமல் , "பொருந்துதல், உடைய, முற்றுதல், உறவுகொள்ளுதல்" போன்ற பொருண்மைகளை தருவதை ஆற்றுபடையின் வாயிலாகவும், பொருள் மாற்றம் வருதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. கழகத் தமிழ் அகராதி கெழு என்பதற்கு , "இடைச்சொல், நிறம், பொருந்திய, சாரியை"[22]என்று விளக்கம் அளிக்கின்றது. க்ரியா அகராதி , "இயற்கணிதத்தில் ஒஇலு போன்ற உறுப்புக்களை பெருக்கும் எண்" [23]என்று கெழுவிற்கு விளக்கம் அளிக்கின்றது. இதிலிருந்து கெழு என்ற சொல் தற்பொழுது கணிதவியலில் பயன்படும் நிலை புலனாகின்றது.

**சிவப்பு**

சிவப்பு என்ற உரிச்சொல் ஆற்றுப்படை இலக்கியத்தில் "செய்த" என்ற வினையெச்ச வாய்ப்பாட்டை ஏற்று "சிவந்த" என்ற நிலையில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | செய்யன் சிவந்த ஆடையன் (திரு.,206) | சிவப்பு (நிறம்) |
| 2. | உகைத்துச் சிவந்த பேருகிர் (சிறு.,199) | |

வினையெச்ச வடிவில் வந்தாலும் , சிவப்பு என்ற உரிச்சொல் நிறப்பண்பை உணர்த்துவதை அட்டவணையின் வழி அறியமுடிகின்றது. கழகத்தமிழ் அகராதி தொல்காப்பியர் சுட்டுவதை போல் சிவப்பு என்பதற்கு , "சினக்குறிப்பு, செம்மைநிறம்"[24]என்ற இரு பொருண்மைகளைச் சுட்டுகின்றது. க்ரியா அகராதி , "இரத்தம், குங்குமம் முதலியவற்றைப் போன்ற நிறம் , ஒருவருடைய நிறத்தைக் குறிப்பிடும்போது கருப்பு என்பதன் எதிரிடையாக வெளிர்நிறம்" [25]என்று சிவப்பு என்ற சொல்லிற்கு விளக்கம் அளிப்பதன் வாயிலாக தற்காலத்தில் நிறத்தை


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

மட்டும் வெளிப்படுத்த சிவப்பு என்ற உரிச்சொல் பயன்படுத்தப்படுவதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

குரு, கெழு, தட, கய, நளி, சாயல், வெம்மை, செழுமை, வாள், நுணங்கு, சிவப்பு, கறுப்பு, கடி, நுழைவு, வார்தல், போகல், ஒழுகல், பசப்பு, நொசிவு ஆகிய 19 உரிச்சொற்களும் தொல்காப்பியர் சுட்டுகின்ற பண்பு உரிச்சொற்கள் ஆகும்.அவற்றுள்தொல்காப்பியர் சுட்டிய நிறப்பணபுஉணர்த்தும்உரிச்சொற்களுள் குரு, கெழு, சிவப்பு ஆகிய மூன்று சொற்களின் பயன்பாடு ஆற்றுப்படை நூல்களில் மிகுந்து உள்ளது. பசப்பு , கறுப்பு ஆகிய சொற்கள் ஆற்றுப்படையில் இடம்பெறவில்லை.குரு என்பது குரூஉ என்று அளபெடுத்து ஆற்றுப்டையில் வந்துள்ளது. தொல்காப்பியர் நிறப்பண்பை எவ்வித மாற்றமும் இல்லாமல் அதே பொருண்மையை விளக்குகின்றது. கெழு நிறப்பண்பை உணர்த்துவதோடு மட்டுமல்லாமல், பொருந்துதல், உடைய, முற்றுதல், உறவுகொள்ளுதல் போன்ற பொருண்மைகளை தருவதை ஆற்றுபடையின் வாயிலாகவும் , பொருள் மாற்றம் வருதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. கழகத் தமிழ் அகராதி.,ப.638
2. செந்தமிழ் அகராதி.,ப.449
3. மெய்யப்பன் தமிழ் அகராதி.,ப.781
4. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,பக்.887-888
5. மதுரைத் தமிழ்ப்பேரகராதி (இரண்டாம் பாகம்).,ப.119
6. தமிழ் மொழி அகராதி.,ப.940
7. தம்பியின் தமிழ் அகராதி.,ப.253
8. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை.,ப.109
9. மேலது.,ப.109
10. ச.ஞானசம்பந்தம் (உ.ஆ), நன்னூல், எழுத்ததிகாரம்.,ப.128
11. மேலது.,ப.131
12. மேலது.,ப.131
13. மேலது.,ப.132
14. மேலது.,ப.132


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

15. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை.,ப.198
16. மேலது.,ப.187
17. மேலது.,ப.188
18. மேலது.,ப.196
19. மேலது.,ப.196
20. கழகத் தமிழ் அகராதி.,ப.360
21. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,பக்.445-446
22. கழகத் தமிழ் அகராதி.,ப.380
23. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.477
24. கழகத் தமிழ் அகராதி.,ப.455
25. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.583


http://Creativecommons.org//license/by/4.0/.